# நற்செய்தியை அறிவித்தல்




ஒரு விவசாயி அறுவடை செய்ய ஏராளமான விதைகளை விதைக்க வேண்டும்; விசுவாசிகளும் தேவனுடைய ராஜ்யத்தில் விசுவாசிகளின் அறுவடையை

சேகரிக்க சுவிசேஷத்தின் விதையை ஏராளமாக விதைக்க வேண்டும். தேவனுடைய ராஜ்யம் வளர்வதைக் காண, இயேசுவைப் பின்பற்றாத மக்களின் விதைக்கப்படாத நிலத்தில் இயேசுவின் நற்செய்தியை எவ்வாறு அறிவிக்க வேண்டும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.



## நாம் எவ்வாறு சுவிசேஷத்தை அறிவிக்க முடியும்?

யோவான் 4:4-42:

> அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தபடியால், யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார். அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது; இயேசு பிரயாணத்தினால்

இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்றினருகே உட்கார்ந்தார்; அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி வேளையாயிருந்தது.

அவருடைய சீஷர்கள் போஜனபதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்தார்கள். அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத்தா என்றார். யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால், சமாரிய ஸ்திரீ அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும்

அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார். அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும். இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ. அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்.

இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக்

கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்தியஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார். அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்.

இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக்கொண்டுவா என்றார். அதற்கு அந்த ஸ்திரீ எனக்குப்புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லையென்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார். அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி:

ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன். எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே என்றாள். அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது. நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள்

இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார். அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள். அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்.

அத்தருணத்தில் அவருடைய சீஷர்கள் வந்து, அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப்பற்றி ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவளுடனே பேசுகிறீரென்றாவது, ஒருவனும் கேட்கவில்லை. அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளேபோய், ஜனங்களை

நோக்கி. நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்குச் சொன்னார்; அவரை வந்து பாருங்கள்; அவர் கிறிஸ்துதானோ என்றாள். அப்பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்.

இப்படி நடக்கையில் சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, போஜனம்பண்ணும் என்று வேண்டிக்கொண்டார்கள்அதற்கு அவர்: நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்றார். அப்பொழுது சீஷர்கள் ஒருவரையொருவர் பார்த்து: யாராவது அவருக்குப் போஜனம் கொண்டுவந்திருப்பானோ என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது.

அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான். விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்சொல் இதினாலே விளங்குகிறது. நீங்கள் பிரயாசப்பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள் என்றார்.

நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள். சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்தில் தங்கவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; அவர் இரண்டுநாள் அங்கே தங்கினார். அப்பொழுது அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்பேர் விசுவாசித்து. அந்த ஸ்திரீயை நோக்கி: உன் சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

இந்த உண்மைக் கதையில், இயேசுவின் நற்செய்தியை நாம்

எவ்வாறு பகிர்ந்து கொள்ளலாம் என்பதற்கு சமாரியப் பெண் ஒரு சிறந்த உதாரணத்தை அளிக்கிறார். சமாரியப் பெண் நீண்ட காலமாக இயேசுவைப் பின்தொடர்ந்த ஒருவர் அல்ல. அவள் ஒரு சரியான வாழ்க்கையை கொண்டவளும் அல்ல. அவள் ஒரு ஆண்மகனும் அல்ல. அவள் அநேகமாக நன்கு படித்தவளும் அல்ல. அவள் அதுவரை ஞானஸ்நானமும் பெற்றிருக்கவில்லை. ஆனால் நகரத்தில் பலர் அவளுடைய சாட்சியின் காரணமாக இயேசுவை நம்பினார்கள். அவருடைய விசுவாசத்திற்க்கு நேராக பலரை வழிநடத்த தேவன் நம்மை பயன்படுத்த தயாராக இருக்கிறார்.

ஊரில் பலர் இயேசுவை விசுவாசிப்பதை காண சமாரியப் பெண் என்ன செய்தார்?

அவள் இந்த காரியங்களைச் செய்தாள் என்பது நமக்கு தெரியும்:



**அவள் உடனே சென்றாள்.**



**அவள் தன் கதையை பகிர்ந்து கொண்டாள்.**



**அவள் தேவனின் கதையைப் பகிர்ந்து கொண்டாள்.**



**இயேசுவை பற்றிய அனுபவங்களை பெற அவள் ஜனங்களை அழைத்தாள்.**

நாமும் இது போன்று விஷயங்களைச் செய்து பலர் விசுவாசிப்பதை காண முடியும்.

## நமது கதையை எவ்வாறு பகிர்ந்து கொள்ளலாம்?



சமாரியப் பெண்ணைப் போலவே, தேவனின் கதையான நற்செய்தியைப் பகிர்ந்துகொள்வதற்கு நமது கதையை ஒரு பாலமாகப் பயன்படுத்தலாம். இந்த வழியில் நம் கதையைப் பகிரும்போது, சுவிசேஷத்தைப் பகிர்வதற்கு விரைவாக செல்லக்கூடிய அளவுக்கு குறுகியதாக இருக்க வேண்டும். இந்த வழியில் நமது கதையைப் பகிர்ந்து கொள்ள எவ்வளவு நேரம் ஆகலாம் என்பதற்கு சுமார் 3 நிமிடங்கள் என்பது ஒரு நல்ல இலக்கு.

நமது கதையைப் பகிர்ந்து கொள்ளும்போது பின்பற்ற உதவக்கூடிய ஒரு வெளிப்பாடு இது:

**நான் இயேசுவை விசுவாசிப்பதற்கு முன்பு எனது வாழ்க்கை**

**நான் இயேசுவை எப்படி விசுவாசிக்க நேர்ந்தது**

**நான் இயேசுவை விசுவாசிக்கிறேன், இப்போது எனது வாழ்க்கை எப்படி வித்தியாசமானது**

## தேவனின் கதையை நாம் எவ்வாறு பகிரலாம்?

நமது கதையைப் பகிர்ந்தவுடன், தேவனின் கதையைப் பகிர்வதற்கு அடிக்கடி நமது கதையைப் ஒரு பாலமாக பயன்படுத்தலாம். சில சமயங்களில், “என் வாழ்க்கையை மாற்றிய இயேசுவைப் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?” போன்ற ஒன்றைக் கேட்பது எளிது. இயேசுவைப் பற்றி பகிர்ந்து கொள்ள நமக்கு வாய்ப்பு வழங்கப்பட்டால், சுவிசேஷத்தின் நான்கு முக்கிய பகுதிகள் நாம் சேர்க்க வேண்டும்:

- **தேவன்**
  தேவன் எல்லாவற்றையும் படைத்தவர். அவர் பரிசுத்தமானவர், நீதிமான், அன்பானவர். அவருடன்

ஐக்கியம் கொள்ள மனிதர்களை அவர் படைத்தார்.

- **மனிதன்**
  தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருவதற்கும் அவருடனான ஐக்கியத்தை அனுபவிப்பதற்கும் மனிதர்கள் படைக்கப்படுகிறார்கள்.

- **இயேசு**
  இயேசு முழுக்க முழுக்க தேவன், முழு மனிதர். அவர் மாம்சத்தை எடுத்துக் கொண்டார், பாவமில்லாத வாழ்க்கை வாழ்ந்தார், சிலுவையில் பலியாக மரித்தார், கல்லறையிலிருந்து எழுந்தார். இயேசுவை விசுவாசிப்பதன் மூலம், தேவனுடனான உறவை மீட்டெடுப்போம்.

- **பதில்**
  யாராவது மனந்திரும்பி இயேசுவை விசுவாசித்தால், அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். அவர் இரட்சகராகவும், அவர்களின் வாழ்க்கையின் ஆண்டவராகவும் மாறுகிறார். யாராவது இயேசுவை விசுவாசிக்கவில்லை என்றால், அவரிடமிருந்து பிரிக்கப்பட்ட தேவனின் நியாயமான கோபத்தின் கீழ் அவர்கள் துன்பப்படுகிறார்கள்.

சுவிசேஷத்தை தெளிவாகப் பகிர பல கருவிகள் உள்ளன. நாம் எந்தக் கருவியைப் பயன்படுத்தினாலும், அல்லது ஒரு கருவியையும் பயன்படுத்தாவிட்டாலும் சரி, குறிப்பிடப்பட்ட நான்கு பகுதிகளையாவது சேர்க்க வேண்டும்.

பின் வரும் வரைபடம் உதவக்கூடிய ஒரு கருவி. வரைபடத்தை

வேறொருவருடன் பகிர்ந்து கொள்ளும்போது, படத்தை விளக்க, வேதாகமத்திலிருந்து வசனத்தைப் படிக்க அல்லது ஒரு கேள்வியைக் கேட்க ஒவ்வொரு பகுதியையும் வரைந்த பிறகு இடைநிறுத்த வேண்டும். பின்வரும் விளக்கப்படத்தின் ஒவ்வொரு பகுதியையும் சேர்த்து சில விளக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.




தேவன் எல்லாவற்றையும் படைத்தார், மேலும் அவருடன் அன்பான, பரிசுத்தமான உறவில் இருக்க ஆணையும் பெண்ணையும் படைத்தார்.




மனிதகுலம் தேவனுடனான உறவிலிருந்து விலகி, அவருடைய கட்டளையை மீறியது, எனவே தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு பிரிவு உள்ளது. ரோமர் 3:23 கூறுகிறது, "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி". பாவம் தேவனிடமிருந்து விலகி, அவருடைய தரத்தை குறைக்கிறது. அனைவரும் பாவம் செய்திருக்கிறார்கள், எனவே இயேசுவைத் தவிர அனைவரும் தேவனிடமிருந்து பிரிந்து இருக்கிறார்கள். ரோமர் 6:23 கூறுகிறது,

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்". இதன் பொருள் என்னவென்றால், நம்முடைய பாவம் மரணத்தை நமக்கு சம்பளமாக அளிக்கிறது. இந்த மரணம் ஆவிகுரிய மற்றும் சரீர ரீதியாகவும் இருக்கும். நம்முடைய பாவத்திற்கான நியாயமான தண்டனை தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட நித்திய துன்பம்.




ஒவ்வொரு நபருடனும் சரியான
உறவை தேவன் இன்னும்
விரும்புகிறார், எனவே அவர் தனது
குமாரனாகிய இயேசுவை
அனுப்பினார். இயேசு மாம்சத்தை
எடுத்துக் கொண்டார், பாவமில்லாத
வாழ்க்கை வாழ்ந்தார், சிலுவையில்
பலியாக மரித்தார், கல்லறையிலிருந்து
எழுந்தார். ரோமர் 5:8 கூறுகிறது, "நாம்
பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து
நமக்காக மரித்ததினாலே, தேவன்
நம்மேல் வைத்த தமது அன்பை
விளங்கப்பண்ணுகிறார்." தேவனின்

அன்பை நிரூபிக்க இயேசு ஒரு பலியாக மரித்தார். இயேசுவை விசுவாசிப்பதன் மூலம், தேவனுடனான உறவை மீட்டெடுப்போம். ரோமர் 10:9-10 கூறுகிறது, "என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்." யாராவது இயேசுவை விசுவாசிக்கிறார்கள், அவர்கள் நம்புகிறார்கள் என்று ஒப்புக்கொண்டு, அவரை ஆண்டவராகப் பின்பற்றினால், அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். நாம் ஒருபோதும் சம்பாதிக்க முடியாத பரிசைப் தேவனிடமிருந்து பெறுவதன்

மூலம், அவருடனான ஐக்கியத்தை என்றென்றைக்கும் அனுபவிக்கிறோம்.



## இயேசுவினுடனான அனுபவத்தை பெற நாம் எவ்வாறு ஜனங்களை அழைக்க முடியும்?

சுவிசேஷத்தை நாம் எந்த வழியில் பகிர்ந்தாலும், நாம் பகிர்ந்து கொள்ளும் நபர்களை பதிலளிக்க அழைக்கிறோம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அந்த தருணத்தில் இயேசுவை விசுவாசிக்க அவர்கள் உறுதியளிக்க ஒரு வாய்ப்பை நாம் வழங்க வேண்டும். சில சமயங்களில் நாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்த பிறகு, “இன்று நீங்கள் இயேசுவை விசுவாசித்து அவரைப் பின்பற்ற விரும்புகிறீர்களா?” இது

போன்று ஒரு கேள்வியை கேட்க முடியும்.

அவர்களுடைய பதில் “ஆம்” என்றால், நாம் தொடர்ந்து இயேசுவை அனுபவத்தை பெறவும் கீழ்ப்படிதலின் நடவடிக்கைகளை எடுக்கவும் அவர்களை வழிநடத்த வேண்டும். நாம் அவர்களுடன் ஜெபிக்க முடியும். அவர்கள் நற்செய்தியைப் புரிந்துகொள்கிறார்கள் என்பதையும், அதை நம்பாதவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும் வசதியாக இருப்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இந்த புதிய விசுவாசியை நாம் சீஷராக்க முடியும். ஐக்கிய கூடுகையை தொடங்க நாம் அவர்களிடம் கேட்கலாம்.

**ராஜ்ய வளர்ச்சிக்கு**

© 2023 ராஜ்ய வளர்ச்சிக்கு

ராஜ்ய வளர்ச்சிக்கான கூடுதல் தகவலுக்கு, கொடுக்கப்பட்டுள்ள லின்க்கை கிளிக் செய்யவும்:
**www.forkingdomgrowth.com**

Scripture quotations are from The Holy Bible, BSI - Tamil - O.V. (New Ortho) published by The Bible Society of India. Used by permission. All rights reserved.

ராஜ்ய வளர்ச்சிக்கு இந்த பொருளுக்கு பங்களித்த அனைவருக்கும் மிக்க நன்றி. கர்த்தரில் நீங்கள் செய்த சேவை ஒருபோதும் வீணாகாது.